**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, KARAIKUDI.**
**C.C. No.169/2025 P.W.1**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | முத்தையா | க–பெ/ த–பெ | வள்ளியப்பன் |
| ஊர்: | : | காரைக்குடி | சமயம் | |
| வயது: | : | 76/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | Depty. Registrar, Rtd. | மாவட்டம் | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.08.2026**

---

**11.08.2026**

**குறுக்கு விசாரணை**

1) நான் என்ன படித்துள்ளேன் என்றால் M.A., படித்துள்ளேன். பென்சன் பெறுகிறேனா என்றால் பெறுகிறேன். எத்தனை வருடங்களாக எதிரியை எனக்கு தெரியும் என்றால் 6–7 வருடங்களாக தெரியும், தொடர்பு கொள்வதில் பழக்கம் ஆனார். கடன் வாங்கியதாக கூறும் காலக்கட்டத்தில் முனிசிபாலிட்டியில் பணி பார்த்தார் என்ன பதவி என்று எனக்கு தெரியாது. காரைக்குடி அல்லது தேவகோட்டையில் பணி பார்த்தாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ம.சா.ஆ.4 ன் நகல் தேவகோட்டையில் உள்ள முனிபல் அலுவலத்திற்கு அனுப்பட்டது என்றால் எனது வழக்கறிஞர் அனுப்பியிருப்பார். எதிரி எங்கு வைத்து பணம் கேட்டார் என்பதை அறிவிப்பு மற்றும் புகாரில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான், வீட்டில் வைத்து பணம் கேட்டார். எதிரி பணம் கேட்டதாக கூறும்போது என்னுடன் யார் இருந்தார் என்றால் என் மனைவி இருந்தார். எதிரிக்கு எந்த தேதியில் பணம் கொடுத்தேன் என்று எனது அறிவிப்பில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல, 07.01.2022 ஆகும். எனது சட்ட அறிவிப்பில் தேதி குறிப்பிடவில்லை என்றாலும், பின்யோசனையிட்டு உடனடியாக பணம் கொடுத்ததாக புகாரில் குறிப்பிட்டுள்ளேன் என்றாலும் சரியல்ல.

2) கொடுத்ததாக கூறும் தொகை ரூ. 4,00,000/– வங்கியில் இருந்து எடுத்து வைத்திருந்தேனா என்றால் ரொக்கமாக வைத்திருந்தேன். எதற்காக ரூ.4,00,000/– ரொக்கமாக வீட்டில் வைத்திருந்தேன் என்றால் என் மருத்துவ தேவைக்காக வைத்திருந்தேன். எனக்கு பென்சன் தொகை எவ்வளவு என்றால் ரூ.45,000/– ஆகும். வருமான வரி செலுத்துகிறேனா என்றால் செலுத்துகிறேன். வருமான வரி கணக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். எதிரிக்கு கொடுத்ததாக கூறும் தொகை வட்டிக்கு கொடுத்தேனா என்றால் சரிதான். மாதம் 1.5 சதவீதம் என ரூ6,000/– ஆகும். வட்டி தொழில் செய்வதற்கு அரசாங்க உரிமம் பெற்றேனா என்றால் இல்லை.

3) ஒரு நபருக்கு கடன் கொடுக்கும்போது அதற்கு ஆதரவாக ஆவணங்கள் பெறப்படும் என்றால் சரிதான். என்ன ஆவணங்கள் பெற்றேன் என்றால் கடன் கொடுக்கும்போது கடனுறுதிசீட்டு எதிரியிடம் இருந்து பெற்றேன். ம.சா.ஆ.1ஐ எதிரி எந்த தேதியில் எழுதிக்கொடுத்தார் என்று அறிவிப்பு மற்றும் புகாரில் குறிப்பிடவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எதிரி எனக்கு எந்த புரோநோட்டும் எழுதி தரவில்லை என்றால் சரியல்ல, பணம் கொடுக்கும்போது எழுதிக் கொடுத்தார். ம.சா.ஆ.1ல் யார் சாட்சி கையொப்பம் செய்துள்ளார்கள் என்றால் எதிரியின் மனைவி சுசீலா தேவி ஆகும். ம.சா.ஆ.1 எழுதியதும் சாட்சியுமானது பாண்டியன் என்றால் சரிதான். எதிரியின் மனைவி சுசீலா தேதி எதிரி புரோநோட் கொடுக்கும்போது வந்தார் என்று என் அறிப்பில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான், ஆனால் அவர் வந்து கையொப்பம் செய்தார். பொதுவாக பணம் கொடுக்கும்போது எவ்வளவு நாட்களில் திருப்பி தருவோம் என்று கேட்டுதான் தருவோம் என்றால் சரிதான். எவ்வளவு நாட்களில் பணத்தை திருப்பி தருவதாக கூறினார் என்று அறிவிப்பு மற்றும் புகாரில் குறிப்பிடவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது 6 மாதங்களில் திருப்பி தருவதாக கூறினார். 6 மாதங்களில் திருப்பி தருவதாக கூறினார் என்பதை என்று அறிவிப்பு மற்றும் புகாரில் குறிப்பிடவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் சொன்னவாறு எதிரி புரோநோட் எதுவும் எழுதித்தரவில்லை என்றாலும், ம.சா.ஆ.1 நான் போர்ஜரியாக தயார் செய்தேன் என்றாலும் சரியல்ல. பாண்டியனை விசாரித்தால் உண்மை நிலவரம் தெரியவரும் என்றால் சரிதான். எனது தரப்பு சாட்சியாக விசாரிக்க தயாராக உள்ளேனா

என்றால் தயாராக உள்ளேன்.

4) 2017–2018 ல் எதிரிக்கு சிவகங்கை மாவட்ட ஆட்சியர்ஆள்வரையில் பணிபார்த்ததால் அப்போது salary account–டிற்றிக்காக கொடுக்கப்பட்ட காசோலை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எந்த தேதியில் கடனை திருப்பி கேட்டேன் என்பதை எனது அறிவிப்பு மற்றும் புகாரில் குறிப்பிடவில்லை என்றால் 24.09.2024 ஆகும். எதிரி தான் காசோலையை பூர்த்தி செய்தததாக அறிவிப்பில் குறிப்பிடவில்லை என்றாலும், பின்யோசனையிட்டு எதிரிதான் பூர்த்தி செய்தார் என்று புகாரில் கூறியுள்ளேன் என்றாலும் அது பற்றி எனக்கு தெரியாது. ம.சா.ஆ. 2 வழக்கு காசோலை தேதி ,பெயர், தொகை நிரப்பியது நான் என்றால் சரியல்ல. ம.சா.ஆ.2 ற்கான சலான் நான்தான் நிரப்பினேன் என்றால் சரிதான். சலானில் உள்ள கையெழுத்தும் ம.சா.ஆ.2 ல் நிரப்பியுள்ள விபரத்தில் உள்ள கையெழுத்தும் ஒன்றுபோல் உள்ளது என்றால் சரியல்ல. காசோலையை வங்கியில் செலுத்துவதற்கு முன்பு அதை பற்றி எதிரிக்கு தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல, எதிரியை தொலைபேசி மூலமாக தொடர்பு கொண்டேன் அவர் பதில் அளிக்கவில்லை. இந்த விபரத்தை அறிவிப்பு மற்றும் புகாரில் கூறியுள்ளேனா என்றால் இல்லை. காசோலை திரும்பியபின்பு எதிரியை தொலைபேசி மூலமாக தொடர்பு கொண்டேனா என்றால் இல்லை.

5)கடன் கொடுத்ததாக கூறும்தேதி 07.01.2022 மற்றும் காசோலை கொடுத்ததாக கூறும் தேதி 24.09.2024 என்றால் சரிதான். 32 மாதம் எதிரி வட்டி தொகை தராமல் இருந்த போது அவர் மீது எந்த ஒரு சட்ட நடவடிக்கையும் எடுக்காதது நம்பும்படி இல்லை என்றால் சரியல்ல, பணம் கேட்ட ஒவ்வொரு வாரமும் பணம் தருவதா கூறி காலம் தாழ்த்தி வந்தார். பாண்டியனை எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் அழகப்பா பல்கலைகழகத்தில் அவர் பணி பார்த்தார். அப்போது பழக்கம். எனக்கும் பாண்டியனுக்கும் வரவு செலவு இருந்ததா என்றால் இல்லை. 08.02.2018 ல் பாண்டியன் எதிரியிடம் இருந்து ரூ. 2,50,000/– 5 சதவீத மாத வட்டிக்கு கடன் பெற்றார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. பாண்டியன் வாங்கிய கடனிற்காகத்தான் எதிரி வழக்கு காசோலையை ஆதரவாக கொடுத்தார் என்றால் சரியல்ல, அதற்கும் தற்போதைய வழக்கிற்கும் எந்த தொடர்பும் இல்லை. கடனை

பாண்டியன் எதிரியிடம் 2020 ல் கொடுத்துவிட்டார் என்றாலும் அதன் பின்பு அவருக்கு உடல் நிலை சரியில்லாமல் காசோலையை திருப்பி பெறாமல் விட்டுவிட்டார் என்றாலும் சரியல்ல. பாண்டியன் எனது நண்பர் என்பதால் எதிரியின் காசோலையை பாண்டியன் என்னிடம் கொடுத்து எதிரி மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. வழக்கு காசோலை தொகையை கொடுக்க எதிரி சட்டப்படி கடமைபட்டவர் இல்லை என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

VALLIMANALAN S A

Digitally signed by VALLIMANALAN S A
Date: 2026.08.11 18:39:17 -0400

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம்,காரைக்குடி.